**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075843

C

1. District : கடலூர் மாவட்டம் | PS ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year 2021 ஆண்டு | FIR No 11/2021 மு.த.அ. எண் | Date 01.10.2021 நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Criminal Procedure Code | Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 30.09.2021 15.15 hrs | Date to : நாள் வரை 30.09.2021 21.00 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 | Time : நேரம் 1200 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV | Time : நேரம் 1200 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட கல்வி அலுவலகம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - | District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.அபிராமி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் D.அசோக்குமார்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- | Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர், | (g) Address : முகவரி கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. L.சக்திவேல், வயது 50, த/பெ, லக்காசுந்தரம்,கண்காணிப்பாளர் அ&ஆ பிரிவுகள், மாவட்ட கல்வி அலுவலகம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.
2. K.சந்திரசேகரன், வயது 50, த/பெ, கல்யாணசுந்தரம், அ3 உதவியாளர், மாவட்ட கல்வி அலுவலகம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

**இன்று 01.10.2021 ந்தேதி பகல் 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அபிராமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் மாவட்டம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு ; நாள் : 01.10.2021 அனுப்புநர் அ.அபிராமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – மாவட்ட கல்வி அலுவலகம், சிதம்பரம் கல்வி மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – முகாந்திரம் மற்றும் முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக**

**(தொடர்ச்சி பக்கம் -3)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 01/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 01/10/21
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.2021, 1400 hrs

Name: பெயர் ............
Rank: நிலை ............ No. எண் ............
[handwritten name and rank]

கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு ஆய்வாளரான அ.அபிராமி ஆகிய நான், 30.09.2021 ஆம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தங்கள் பள்ளி சார்ந்த பல்வேறு பணிகளுக்காக பல்வேறு தினங்களில் சிதம்பரம் கல்வி மாவட்ட அலுவலகத்தில் செல்லும்போது பணிகளுக்கு பணம் பெற்றுக்கொண்டு பணி செய்துக்கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையிலும், அதனடிப்படையில் சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.L.சக்திவேல் மற்றும் உதவியாளராக பணிபுரியும் திரு.K.சந்திரசேகரன் என்பவர்களை சந்தித்து தங்களது நிறுவனத்திற்கு தேவையான நிர்வாக உதவிகளை செய்துக்கொடுத்ததற்காக கேட்ட பணத்தை கொடுக்கப்போவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் எங்களது மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அவரின் உத்தரவினை பெற்று, நான் உடன் புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 12.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் D.சண்முகம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு மாலை சுமார் 02.30 மணிக்குமேல் சென்றால் திடீர் ஆய்வு செய்து சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் சக்திவேல் மற்றும் உதவியாளர் சந்திரசேகரன் அலுவலக இருக்கைகளில் உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் தனது அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் சண்முகம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் 01.00 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு சிதம்பரம் அண்ணாமலை நகர் போகும் வழியில் கிழக்கு மேற்காக உள்ள சாலையில் தெற்கு பார்த்து அமைந்துள்ள மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 03.15 மணிக்கு மேற்கு பார்த்து அமைந்து இருக்கும் சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். நானும்,

ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் கண்காணிப்பாளர் சக்திவேல் என தெரிந்துக்கொண்ட பின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்தபோது தனது பெயர் L.சக்திவேல், வயது 50, த/பெ, லக்காசுந்தரம், கண்காணிப்பாளர் அ & ஆ பிரிவுகள், மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகம், சிதம்பரம் கல்வி மாவட்டம் என்றும் வீட்டு முகவரி : கதவு எண்.196, அன்னைதெரசா நகர், மூலக்குளம், புதுச்சேரி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, கண்காணிப்பாளர் சக்திவேல் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்யப்போகும் விவரத்தை தெரிவித்தேன்.

உடன் அலுவலகத்தின் தெற்கு புறத்தில் கிழக்கு பக்கமாக பகுதி அலுமினியம் மற்றும் கண்ணாடியால் பிரிக்கப்பட்ட அறையில் நேர்முக உதவியாளர் என பெயரிட்ட அறையினுள் இருந்தவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் சத்தியசீலன் என்றும், தான் மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் என்றும் தகவல் தெரிவித்தார். உடன் அதற்கு தெற்குபுறத்தில் மாவட்ட கல்வி அலுவலர் என எழுதப்பட்ட அறையில் மாவட்ட கல்வி அலுவலர் அவரது அறையில் இல்லை. அவரை பற்றி நேர்முக உதவியாளரிடம் விசாரிக்க மாவட்ட கல்வி அலுவலர் ரா.திருமுருகன் அவர்கள் அலுவர் பணியாக பள்ளி ஆய்வுக்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். மேலும் இவ்வலுவலகத்தை திடீர் ஆய்வு சோதனை செய்ய வந்த விவரத்தை நேர்முக உதவியாளரிடம் தெரிவித்தும், உடன் இத்தகவலை மாவட்ட கல்வி அலுவலருக்கு தெரிவிக்க வேண்டியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி நேர்முக உதவியாளர் மாவட்ட கல்வி அலுவலருக்கு தனது செல்போனில் மேற்படி தகவலை தெரிவித்தார். தொடர்ந்து நேர்முக உதவியாளரின் அறை மற்றும் இரும்பு பீரோவை சோதனை செய்ததில் பணம் ஏதுமில்லை.

மாவட்ட கல்வி அலுவலரின் அலுவலகத்திற்கு மேற்கு புறத்தில் இரண்டு தனித்தனி கம்ப்யூட்டர்களில் தட்டச்சு செய்துக்கொண்டிருந்த பெண்களை பற்றி விசாரிக்க அவர்கள் (1)M.பவானீஸ்வரி, வயது 29, க/பெ, கார்த்திகேயன், தட்டச்சர், (2)N.சௌந்தர்யா, வயது 28, க/பெ, சதீஷ், தட்டச்சர் என்று தெரிவித்தனர். அவர்களை நான் மறைவிடத்திற்கு அழைத்துச்சென்று சோதனை செய்ததில் அவர்களிடம் பணம் ஏதும் இல்லை.

மேலும் திடீர் ஆய்வு சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம்பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து காண்பித்தோம்.

மேற்படி மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகமானது செயல்படும் இடமானது அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் போர்டிகோ சுமார் 50 x 5 அடி நீள அகலமுள்ளது. அதனை தொடர்ந்து பிரதான வாயிலும், அதனை தொடர்ந்து சுமார் 50 x 15 அடி நீள அகலமுள்ள பிரதான அறை அமைக்கப்பட்டுள்ளது.

அந்த அறையின் தென்புறம் மரத்தாலான மேஜை போடப்பட்டு அதன் அருகில் கண்காணிப்பாளர் இருக்கை வடக்கு பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. அந்த இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அந்த இருக்கைக்கு வடபுறம் 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. 2வது அடுக்கில் இருந்த ஆவணங்களுக்கடியில் இருந்த ஒரு கருப்பு நிற Leather Bag ஐ சோதனையிட அதில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க 200 x 9 = 1800/-, 100 x 22 = 2200/-, 50 x 48 = 2400, 20 x 75 = 1500, 10 x 21 = 210 ஆக மொத்தம் ரூ.8,110/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த கண்காணிப்பாளர் சக்திவேலிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்.

பின்னர் கண்காணிப்பாளர் சக்திவேலின் இருக்கைக்கு எதிரில் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் எஸ்.கணேசன் என்றும், தான் தணிக்கை பிரிவு கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

கண்காணிப்பாளர் கணேசனுக்கு வலதுபுறத்தில் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் க.சந்திரசேகரன் என்றும், தான் அ3 உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த பீரோவை சோதனையிட 3வது அடுக்கில் இருந்த ஆவணங்களுக்கடியில் இருந்த ஒரு பழுப்பு நிற Leather Hand Bag ஐ சோதனையிட அதில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க 2000 x 4 = 8000/-, 500 x 204 = 1,02,000/-, 200 x 1 = 200/- ஆக மொத்தம் ரூ.1,10,200/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் சந்திரசேகரனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும் அந்த இரும்பு பீரோவின் கீழ் அடுக்கை சோதனை செய்தபோது அதில் OTTO Shirt – Blue Colour Rs.795/- இரண்டும், Lero Shirt – Pink Colour Rs.910/- ஒன்றும், Oxember Shirt – Blue Colour ஒன்றும், T Shirt நான்கும், Shirt ஐந்து, Pant இரண்டும் இருந்தன. அந்த உடைகள் பற்றி விவரம் கேட்க அவற்றை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து அந்த இரும்பு பீரோவுக்கு வலது பக்கத்தில் இருந்த 4 அடுக்கு கொண்ட மற்றொரு இரும்பு பீரோ பற்றி விவரம் கேட்க அந்த இருக்கையானது அ5 எழில்முருகன் என்பவரது இருக்கை எனவும், அவர் மாவட்ட கல்வி அலுவலருடன் ஆண்டாய்வு பணிக்காக உதவிக்கு சென்றுள்ளார் என்ற விவரம் தெரிவித்தனர். மேலும் அந்த பீரோவின் சாவி இல்லாத காரணத்தால் அந்த பீரோவை திறக்க இயலவில்லை.

அ5 எழில்முருகனின் இருக்கைக்கு வலது புறத்தில் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஜெயசித்ரா எனவும், தான் இருக்கை பணி கண்காணிப்பாளர் எனவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ

ஏதுமில்லை. அந்த அலுவலரை நான் தனியறைக்கு அழைத்து சென்று சோதனையிட அவரிடம் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. தொடர்ந்து அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

ஜெயசித்ராவின் இருக்கைக்கு எதிரில் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கை காலியாக இருந்தது. அந்த இருக்கையின் அலுவலர் பற்றி அங்கிருந்த மற்ற அலுவலர்களிடம் விசாரிக்க அந்த இருக்கையின் பதிவறை எழுத்தர் பணியிடம் காலியாக உள்ளதாக தெரிவித்தனர். அந்த மேஜை மற்றும் இருக்கைக்கு அருகில் இருந்த 4 அடுக்கு கொண்ட இரண்டு இரும்பு பீரோக்களை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ இல்லை.

பதிவறை எழுத்தரின் இருக்கைக்கு வலதுபுறத்தில் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ரா.செல்வராணி என்றும், தான் ஆ2 இருக்கை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் கிழக்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

இதற்கிடையில் மாவட்ட கல்வி அலுவலர் ரா.திருமுருகன் அவர்கள் அலுவலகத்திற்கு வந்துசேர்ந்தார். அவரிடம் நானும், ஆய்வுக்கு வந்த அலுவலர்கள் அனைவரையும் அறிமுகம் செய்தவைத்தேன். அவர் ஆய்வுக்குழுவுக்கு ஒத்துழைப்பதாக சொல்லி ஆய்வுக்குழுவுடன் இருந்தார். தொடர்ந்து அவரது முன்னிலையில் அவரது அறையில் இருந்த பீரோவை சோதனை செய்ததில் அதில் பணம் ஏதுமில்லை.

ஆ2 இருக்கை கண்காணிப்பாளர் செல்வராணிக்கு வலதுபுறத்தில் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் எ.வசந்திஜாஸ்மின் என்றும், தான் அ6 உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை

சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் கிழக்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

அ6 வசந்தி ஜாஸ்மினுக்கு வலதுபுறத்தில் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ச.விக்ரமன் என்றும், தான் ஆ4 உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

ஆ4 உதவியாளர் விக்ரமனின் இருக்கைக்கு வலதுபுறத்தில் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் முத்துக்குமார் என்றும், தான் ஆ3 உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடைய இருக்கை மற்றும் மேஜையை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. அவருக்கு பின்புறம் மேற்கு திசை நோக்கி 7க்கு 3 என்ற அளவுள்ள இரும்பு பீரோ ஒன்று உள்ளது. அதனுள் 4 அடுக்குகள் உள்ளன. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதை சோதனையிட அதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை.

தொடர்ந்து உதவியாளர் முத்துக்குமாருக்கு வலதுபுறத்தில் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த மரத்தாலான மேஜையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபர்களை விசாரிக்க அவர் தனது பெயர் எஸ்.கணேசன் மற்றும் கோ.பாஸ்கர் முருகன் என்றும், தாங்கள் இருவரும் கண்காணிப்பாளர் அந்தஸ்தில் தணிக்கை பிரிவில் பணிபுரிவதாக தெரிவித்தனர். மேலும் ஒவ்வொரு மாதத்தின் கடைசி தேதியில் இவ்வலுவலகத்தில் வந்து பணிபுரிவதாகவும் இதர நாட்களில் உத்தரவுபடி கல்வி மாவட்டங்களில் தணிக்கை பணி மேற்கொள்வதாகவும் தெரிவித்தும் தங்கள் பணி சம்மந்தமான கோப்புகளையும் காண்பித்தனர்.

தொடர்ந்து நேர்முக உதவியாளரிடம் மாவட்ட கல்வி அலுவலர் முன்னிலையில் சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலகத்தின் (1) வருகை பதிவேடு கேட்க 2021ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிட்டு இன்றைய தேதியான 30.09.2021 வரை பதிவிட்ட வருகை பதிவேட்டினை எடுத்துக்கொடுத்தார். (2) மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீட்டு விவர கோப்பின் நகல் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. (3) க.சந்திரசேகரன் என்பவரது SBI Life Insurance Policy Number. 1K044300703 SBI Life Smart Wealth Builder, (4) க.சந்திரசேகரன் என்பவரது HDFC Life Insurance Policy Number 20372690, (5)க.சந்திரசேகரன் என்பவரது HDFC Life Insurance Policy Number 22427908 நகல் மற்றும் (6) மாவட்ட கல்வி அலுவலரின் செப்டம்பர்/2021க்கான சுற்றுப்பயண விவரம் நகல், (7)SBI Pass book க.சந்திரசேகரன் Account number 11040319450, (8) க.சந்திரசேகரன் என்பவரது HDFC Account number 50100002245064, (9) க.சந்திரசேகரன் என்பவரது Indian Bank Account number 6004631723, (10) மேற்சொன்ன அ3 உதவியாளர் க.சந்திரசேகரனின் இருக்கையின் பின்புறம் அவரது பொறுப்பில் இருந்த இரும்பு பீரோவினுள் இருந்த லெதர் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்ட ரூ.1,10,200/–. (11) மேற்சொன்ன அலுவலகத்தின் கண்காணிப்பாளர் சக்திவேலின் இருக்கைக்கு வடப்புறம் அவரது பொறுப்பில் உள்ள இரும்பு பீரோவினுள் இருந்த லெதர் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்ட பணம் ரூ.8,110/– ஆகியவைகளை மேல்நடவடிக்கைக்காக வேண்டி சம்மந்தப்பட்ட நபர்களின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.1,18,310/– கைப்பற்றப்பட்டது.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 03.15 மணி முதல் இரவு 09.00 மணிக்கு முடிக்கப்பட்டது. சோதனையின்போது சோதனைக்குரியவர்கள் அனைவரும் கெரோனா முன்னெரிச்சக்கை நடடிவக்யைாக முககசவம் அணிந்து தனிமனித இடைவெளி பின்பற்றி சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை.

மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,18,310/– குறித்து விசாரிக்க மேற்சொன்ன சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் L.சக்திவேல் மற்றும் உதவியாளர் K.சந்திரசேகரன் ஆகியோர் உரிய

விளக்கம் ஏதும் சொல்லவில்லை. எனவே கைப்பற்றப்பட்ட இந்த பணமானது சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலரின் எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தங்கள் பள்ளி சார்ந்த பல்வேறு பணிகளுக்காக பல்வேறு தினங்களில் சிதம்பரம் கல்வி மாவட்ட அலுவலகத்தில் செல்லும்போது கொடுத்த லஞ்ச பணம்தான் என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

எனவே சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் L.சக்திவேல் மற்றும் உதவியாளர் K.சந்திரசேகரன் ஆகியோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, இன்று 01.10.2021 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நான் நேரில் வந்து எனது புகார் மனுவினை தங்களிடம் கொடுத்துக்கொள்கிறேன். மேலும் 30.09.2021ந்தேதி சிதம்பரம் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,18,310/– மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட 9 ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (அ.அபிராமி), ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் மாவட்டம், கடலூர். சமர்ப்பிக்கப்படுகிறது : இன்று 01.10.2021 ந் தேதி பகல் 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.அபிராமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் நிலையம் வந்து இப்புகார் மனுவை அளித்தார். இப்புகார் மனுவை பெற்று, மனுவின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.11/2021, சட்டப்பிரிவு 102 CrPC ன்படி, சந்தேக அலுவலர்களான L.சக்திவேல், கண்காணிப்பாளர் மற்றும் K.சந்திரசேகரன், உதவியாளர் ஆகியோர் மீது இவ்வழக்கு பதியப்படுகிறது. இவ்வழக்கின் அசல் ஆவணங்கள் நீதித்துறைக்கும் இதர நகல்கள் உயர் அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

S. Shanmugam 01/10/21

(S. Shanmugam)

Inspr. of Police

V&AC, Cuddalore.